[29th January 1972

அனுப்ப வேண்டுமென்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பிறகு தெரிவிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தகவல் வராமலிருந்தால் அதை அரசு கவனித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. எஸ். முத்துசாமி : இந்த விவா அறிக்கையில், பல தகவல்கள் மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து தலைமைக் கல்வி அலுவலகத்திற்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கிற எழுத்தர்கள் குறைந்து விட்டதால், இது போன்ற தாமதம் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா ? அறிந்திருந்தால் கிளார்க்குகளை அதிகமாகப் போட்டு அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : காலதாழ்வுக்கான காரணங்கள் என்ன என்பது புரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போன்ற காரணமாக இருந்தால், அது தனியாகக் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படவேண்டியதாகும். ஆனால் எல்லாவற்றிற்கும் அதுதான் காரணமாக இருக்குமென்று சொல்வதற்கில்லை. பொதுவாகவே இதில் ஏற்படும் நிலைமை மற்றவை பற்றி சுற்றறிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குனருக்கும் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கும் விடப்பட்டிருக்கின்றன.

Temple Tanks

*55 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has taken a number of temple tanks in Madras on lease; and

(*b*) if so, the details thereof ?

கோவில் குளங்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள கோவில் குளங்கள் பலவற்றை சென்னை மாநகராட்சி குத்தகைக்கு எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மைலாப்பூர் ஆதிகேசவபெருமாள் கோயில் நம்பகர்களின் கோரிக்கையின்பேரிலும், பொது மக்களின் நலத்தை முன்னிட்டும், மைலாப்பூரில் உள்ள சித்திரக்குளத்தைச் சென்னை மாநகராட்சி ஆண்டுதோறும் பெயரளவு வாடகையாக ரூ. 1-க்கு 1953 முதல் 99 ஆண்டுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் குளங்களை நிர்வகிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து மாநகராட்சி மானியம் ஏதும் பெற்றுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சுகாதார நிலையம்போன்று தண்ணீரைத் தூய்மைப் படுத்துதல், பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. குளம் பழுதுபட்டிருப்பதால், சரிப்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்து, ரூ. 66,500

29th January 1972]

மதிப்பீட்டில் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்புத் துறையை மாநகராட்சி கேட்டிருக்கிறது. அது அறநிலையப் பாதுகாப்புத் துறையின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

Secondary Education Board

* 56 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have constituted a Secondary Education Board in the State; and

(*b*) if so, the details thereof?

இடைநிலைக் கல்வி வாரியம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இடைநிலைக் கல்வி வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். மாநில இடைநிலைக் கல்விக் குழு 25—10—1971 நாளிட்ட 1828 எண்ணுள்ள அரசாணையின் படி (நிலை) திருத்தி அமைக்கப்பட்டு பணியாற்றி வருகிறது.

(இ) இக்குழு பதினேழு நபர்களைக் கொண்டது. அவர்கள் கீழ்க்கண்ட சார்பிற்கு பிரதிநிதியாவார்:—

அரசு அதிகாரிகள் (அலுவலால் உறுப்பினர்) ...	5
மதுரைப் பல்கலைக் கழகம்	2
அண்ணாமலை பல்கலைக் கழகம்	1
ஆசிரியர் சார்பில்	2
நிர்வாகத்தினர் சார்பில்	3
சென்னைப் பல்கலைக் கழகம்	4

இது சட்டரீதியற்ற ஒரு குழுவாகும். பள்ளிக் கல்வி இயக்குநரே இதன் தலைவர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த வாரியத்தில் சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் இடம் பெறவில்லை என்று அறிகிறேன். அதற்குக் காரணம் என்ன என்பதையும் அவர்கள் ஒருவர் இருவர் இதில் இருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் சொல்லி அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதற்கென்று தனி விதிமுறை இருக்கிறதா இல்லையா என்று தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அறிந்து சொல்ல முடியும். அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறச் செய்ய இயலுமா இயலாதா என்று தெரியவில்லை. அந்தக் கருத்தை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.